**அ.வ.எண்.120/2022**
**பி.வா.சா.1 : பரிமளாதேவி**
**தேதி : 29.10.2025**
**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**
**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**
**ஆரம்பிக்கும் நேரம் 11.45**

என்னுடைய பூர்வீக ஊர் மூத்தாம்பாளையம். உங்களை உட்பட வாதிகளையும், தாவா சொத்தின் கிராமத்திலிருந்து சுமார் 6 கிலோமீட்டர் சுற்றுவட்டாரத்தில் திருமணம் செய்து கொடுத்தள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். தாவா A அட்டவணை சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் ஆகும். A அட்டவணை சொத்தை நான் விவசாயம் செய்து வருவதில்லை. கருப்பண்ணகவுண்டருக்கு பாகப்படி பிரிந்த சொத்துக்கள் அனைத்தும் தாவா A அட்டவணையில் கண்டுள்ளதா என்றால் இல்லை. கருப்பண்ணகவுண்டர் சுயமாக சம்பாதித்த ஒரு 75 செண்ட் நிலத்தை தாவா A அட்டவணையில் குறிப்பிடப்படவில்லை விடுபட்டுள்ளது. இது குறித்து தான் என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் நான் தாவாவில் விடுபட்ட சொத்தாக கூறியுள்ளேன். **அந்த விடுபட்ட சொத்தின் ஆவணம் தான் இது. அது வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** விடுபட்ட விவரத்தை நான் எதிருரையில் குறிப்பிடவில்லை. என் தகப்பனார் 10 ஆம் வகுப்பு ஈரோட்டில் மாமா வீட்டிலிருந்து மதராஸா பள்ளியில் படித்தார். என் தகப்பனார் 10 ஆம் வகுப்பு வரை படித்த போது அந்த காலகட்டத்தில் எந்த ஒரு வேலையோ, வியாபாரமோ செய்யவில்லை என் தகப்பனார் என் மாமாவின் தானிய

மண்டியில் வேலை செய்தார். அதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் இல்லை. "பி" அட்டவணை சொத்துக்கள் என் தந்தை 25 ஆம் வயதிற்கு பிறகு முத்தாம்பாளையத்திற்கு வந்த பிறகு வியாபாரம் செய்த பிறகு வாங்கினார் என்று கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். என் தகப்பனார் மற்ற விவசாயிகளின் நிலத்திலிருந்து கரும்பை விலைக்கு வாங்கி ஆலை போட்டு வெல்லம் தயாரித்து ஈரோட்டில் வெல்லத்தை விற்றார். முத்தாம்பாளையத்தில் அனைவரும் கரும்பு தான் போடுவார்கள் என்றால் சரியல்ல முத்தாம்பாளையம் கரைமடை பகுதி என்பதால் அங்கு கரும்பு விலையாது. முத்தாம்பாளையத்தில் கரும்பு விவசாயம் தண்ணீர் இருப்பவர்கள் மட்டும் செய்து வந்தார்கள். 1ம் பிரதிவாதியின்/என் தகப்பனார் தாயார் என் தகப்பனாருக்கு 16 வயது இருந்த போது இறந்துவிட்டார். உங்கள் தகப்பனாருக்கு வீட்டில் யாரும் இல்லாததால் அவருக்கு 16 வயதிலேயே திருமணம் ஆகிவிட்டது என்று சொன்னால் சரிதான். உங்கள் தகப்பனார் 1949 ல் பிறந்தார் என்று சொன்னால் சரியல்ல 1950 ல் பிறந்தார். என் தகப்பனாருக்கு 25 ஆம் வயதில் திருமணம் நடைபெற்று அதற்கு பிறகு தான் நான் பிறந்தேன். நான் 1972 ல் பிறந்தேன். என் தகப்பனாருக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. உங்கள் தகப்பனாருக்கு 25 வயதில் திருமணம் ஆனது என்று எதனடிப்படையில் கூறினேன் என்றால் யூகத்தின் அடிப்படையில் கூறினேன். 1ம் பிரதிவாதி / உங்கள் தகப்பனாருக்கு 16 வயதில் திருமணமாகி

உங்கள் தகப்பனாரின் 22 ஆம் வயதில் நீங்கள் பிறந்தள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். 1ம் வாதி 03.09.1970 ல் பிறந்துள்ளார் என்று சொன்னால் சரிதான். 1ம் வாதி பிறக்கும்போது உங்கள் தகப்பனாருக்கு 20 வயது என்று சொன்னால் சரிதான். எங்கள் ஊரில் படிக்க பள்ளிகள் இல்லாததால் என் தகப்பனார்/1ம் பிரதிவாதி ஈரோட்டில் தாய்மாமன் வீட்டிலிருந்து படித்து வந்தார். என் தாய்மாமன் வீட்டில் தற்போது ஒருவரும் இல்லை வாரிசு இல்லாமல் உள்ளார். என் தாய்மாமாவின் தங்கை உயிருடன் உள்ளார். என் தாய்மாமாவின் தங்கைக்கு 58, 60 வயது இருக்கும். 1ம் பிரதிவாதி தாய்மாமன் வீட்டில் படிக்கும்போது என் தாய்மாமாவின் தங்கை தாய்மாமன் வீட்டில் தான் இருந்தார் என்றால் சரிதான். மேற்சொன்ன நபரின் பெயர் அன்னபூரணி. அன்னபூரணியை விசாரித்தால் என் தகப்பனார் படித்தாரா வேலைக்கு சென்றாரா என்று தெரியும். அன்னபூரணிக்கும் எனக்கும் விரோதம் எதுவும் இல்லை சுமூகமான உறவுதான். நீங்கள் பி அட்டவணையில் கண்டுள்ள 1 மற்றும் 3 வது அயிட்ட சொத்தை உங்கள் தகப்பனார் 25 வயதுக்கு மேல் வியாபாரம் செய்து பிடித்தார் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 கிரையப்பத்திரத்தின் போது 1ம் பிரதிவாதி/உங்கள் தகப்பனாருக்கு 22 வயது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.4 கிரையப்பத்திரத்தின் போது 1ம் பிரதிவாதி/உங்கள் தகப்பனாருக்கு 25 வயது என்று சொன்னால் சரிதான். முத்தாம்பாளையத்தில் உள்ள

நிலங்களுக்கு LPB தண்ணீர் பாயும் நிலம் என்பதால் நில உச்ச வரம்பிற்கு கட்டுப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஏற்கனவே உங்கள் தாத்தா கருப்பண்ணகவுண்டருக்கு நில உச்ச வரம்பு சட்டத்திற்குள் நிலங்கள் இருந்ததால் உங்கள் தாத்தா தாவா பி அட்டவணையில் கண்டுள்ள 1 மற்றும் 3 சொத்துக்களை 1ம் பிரதிவாதி பெயரில் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. கரும்பு ஆலை வைத்து வெல்லம் தயாரித்து விற்றதை தவிர வேறு வேலை செய்யவில்லை என்றால் என் மாமாவின் தானிய மண்டியிலிருந்து வாங்கி வியாபாரம் செய்தார். உங்கள் தாய்மாமா தானியமண்டியின் பெயர் என்ன என்றால் குமாரசாமி அன்ட் கோ, ஈரோடு ஜின்னா வீதியில் அந்த கடை அமைந்திருந்தது. என் முதல் தாய்மாமா சுமார் 2 வருடத்திற்கு முன்பு இறந்தார். எங்களுக்கு 2 தாய்மாமாக்கள் உள்ளார். 2வது தாய்மாமா இதற்கு 4 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். 2 தாய்மாமாக்களுக்கும் குழந்தைகள் இல்லை. என் தகப்பனார் எங்கள் சொந்த ஊரில் கடை வைத்தோ, வாடகைக்கு இருந்தோ எந்த ஒரு வியாபாரமும் செய்யவில்லை. உங்கள் பிரமாணவாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதி/உங்கள் தகப்பனார் உங்கள் கிராமத்தில் உரக்கடை வைத்து வியாபாரம் செய்து வந்தார் என்று கூறியுள்ளீர்கள் அது பொய் என்றால் சரியல்ல. உரக்கடை வைத்திருந்த விவரத்தை என் தகப்பானர் / 1ம் பிரதிவாதி கூறி தான் எனது பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.4

ஆவணங்கள் மூலமாக தாவா பி செட்யூலில் கண்டு 1மற்றும் 3 அயிட்ட சொத்துக்களை உங்கள் தகப்பனார் கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் விவசாயம் கருப்பண்ணகவுண்டர் மகன் கந்தசாமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல கருப்பண்ணகவுண்டர் மட்டும் விவசாயி என் தகப்பனார் வியாபாரி. என் தகப்பனார் இன்று நீதிமன்றம் வரவில்லை. மருத்துவமனைக்கு சென்றுள்ளார். என் தகப்பனார்/1ம் பிரதிவாதி என்னை நீதிமன்றத்தில் விட்டுவிட்டு சென்றார். 1ம் பிரதிவாதி உங்களுக்கு தான செட்டில்மெண்ட் பி.வா.சா.ஆ.1ன் படி செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தது உங்கள் தாயாருக்கு பிடிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தாயார் இறந்ததற்கு நீங்கள் வரவில்லை என்று சொன்னால் சரிதான். உங்கள் தாயார் வாதிக்கு சொத்துக்கள் தராமல் உங்களுக்கு மட்டும் சொத்துக்களை எழுதிக்கொடுத்ததால் தற்கொலை செய்துகொண்டார் என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் எனக்கு தானம் செய்து பி.வா.சா.ஆ.1 தானசெட்டில்மெண்ட் எழுதிவைக்கும் 10 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து இன்று வரை நான் என் தகப்பனார் வீட்டிற்கு சென்றதில்லை என்று சொன்னால் சரிதான். உங்கள் தாயார் இறந்தபின்னிட்டு உங்கள் தகப்பனார் பசுமை இல்லம் என்ற ஆசிரமத்தில் சேர்ந்து கொண்டார் என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.1 எழுதிக்கொடுத்ததாலும் உங்கள் தகப்பனார் உங்கள்

தாயார் இறந்ததற்கு ஊருக்கு வந்தால் ஊர் மக்கள் திட்டுவார்கள் என்ற காரணத்தால் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் பி.வா.சா.ஆ.2 ன் படி சிவக்குமாருக்கு சொத்துக்களை கிரையம் செய்து விற்றதால் உங்கள் தகப்பனார் அதற்கு பின்னிட்டு பசுமை இல்லத்திற்கு சேர்ந்தார் என்று சொன்னால் என் தாயார் இறந்தபிறகு சென்றார். (சாட்சி தானாக முன்வந்து என் சகோதரிகள் மனஉலைச்சலுக்கு ஆளாக்கியதால் 1 ம் பிரதிவாதி பசுமை இல்லத்திற்கு சென்றுவிட்டார்.) உங்கள் தகப்பனார் சிவக்குமாருக்கு பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் கிரையம் எழுதிக்கொடுத்ததினால் தான் உங்கள் தகப்பனார் பசுமை இல்ல ஆசிரமத்திற்கு சென்றுவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தகப்பனாரின் வீட்டு பழைய எண் 2/247, புதிய எண்.2/172 என்று சொன்னால் சரிதான். என் தகப்பனாரின் குடும்ப அட்டை இது தான். அது வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. உங்கள் தகப்பனாரின் வீட்டில் 1 ம் பிரதிவாதி, உங்கள் தாயார், 3 ம் வாதி சுசிலா ஆகியோர் 2005 வரை ஒன்றாகத்தான் இருந்தார்கள். 3 ம் வாதிக்கு விவாகரத்து ஆகிவிட்டது. 2011 ஆம் ஆண்டு வரை 3 ம் வாதி சுசீலா 1 ம் பிரதிவாதியின் வீட்டில் தான் இருந்து வந்தார். வாதிகள் தாவா சொத்துக்களில் பாடுபட்டது எனக்கு தெரியாது. ஏனென்றால் நான் 10 வருடமாக தாவா சொத்திற்கு செல்வதில்லை. வாதிகள் 1 ம் பிரதிவாதி/தகப்பனார் வீட்டிற்கு சென்றார்களா என்றால் எனக்கு

தெரியாது. தாவா ஏ அட்டவணை சொத்தில் தென்னந்தோப்பு இல்லை. என் மகன் ஸ்ரீராமிற்கு 2024 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. அந்த திருணமத்திற்கு என் தகப்பனார் பசுமை இல்லத்திலிருந்து வந்து தான் கலந்து கொண்டார் என்றால் சரிதான். உங்கள் தகப்பனாரை எப்படியோ சரிசெய்து பி.வா.சா.ஆ.1 தான செட்டில்மெண்ட் பெற்றுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 10 வருடமாக உங்கள் தகப்பனாருடன் போக்குவரத்து இல்லாமல் இருந்த காரணத்தால் உங்கள் தகப்பனார் பி.வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தை பிரியத்துடன் உங்களுக்கு எழுதிக்கொடுக்க சாத்தியமில்லை என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 தானசெட்டில்மெண்ட் 1ம் பிரதிவாதி அவருடைய விருப்பத்தில் எழுதிக்கொடுக்காத காரணத்தால் அது செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மேலும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பதால் அதை 1ம் பிரதிவாதி உங்களுக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்க உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ல் உங்களுக்கு கொடுத்த தான சொத்தை பிவா.சா.ஆ.2–ன் படி விற்ற விவரத்தை என் தகப்பனாரிடம் கூறியுள்ளேன். சிவக்குமார் வழக்கு நிலுவையில் உள்ளதை தெரிந்து கொண்டுதான் பி.வா.சா.ஆ.2 யை உங்களிடமிருந்த கிரையம் பெற்றுள்ளார். நீங்கள் சொத்தை விற்றுவிட்டதால் உங்களுக்கு அதில் உரிமை இல்லை எனும் போது ஏன்

வழக்கை நடத்தி வருகிறீர்கள் என்றால் நான் வழக்கை நடத்தவில்லை. நீதிமன்றத்திலிருந்து என்னை அழைத்ததால் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்றத்திலிருந்த வந்த அழைப்பாணையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் இயலாது. நீங்கள் சொல்வது அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. அனைத்து சொத்துக்களும் விவசாய வருமானத்திலிருந்து வாங்கியது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களில் 1 வருடம் LBP மூலம் தண்ணீர் ஒரு வருடம் வரும் ஒரு வருடம் வராது. தண்ணீர் வரும்போது எல்லு, கடலை, நெல் விவசாயம் செய்வோம். தாவா சொத்துக்களில் விவசயாம் செய்து வந்த போதிலும் அதை தரிசு நிலம் என பொய்யாக சாட்சியம் அளிக்கறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. LBP பாசன வசதியுடன் தாவா சொத்துக்களில் 3 கிணறுகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த கிணறுகளில் 2 மின் மோட்டார்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான். 1965-ல் பாகம்பிரிக்கும்போதே பாகத்துடன் ஆடு மாடுகளும் பாகம்பிரிக்கப்பட்டு அதற்குண்டான பாதையும் காட்டப்பட்டது என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதி/உங்கள் தகப்பனார் தனியாக ஆடுமாடுகள் வாங்கியும் பால்கறந்ததாக கூறுவதும் பொய் என்று சொன்னால் சரியல்ல. தாவாப்படி தீர்பபாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. (முடிவடையும் நேரம் – 12.35)

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.